## நோயுற்றவரின் உரிமைகள்

DSC கிளினிக்கில் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளும் உங்களை:

- உங்கள் பாலினம், வயது, சாதி, மத, சமூக அந்தஸ்து, பாலின பாகுபாடு, உடல் மற்றும் மன திறங்களைப் பொறுத்து அல்லாமல் அனைவரையும் மிகவும் மரியாதையுடனும், சமமாகவும், இரக்கத்துடனும் நடத்தப்படுகிறீர்கள்.
- உங்களின் தேவைக்கு ஏற்ப சிகிச்சையளிக்கப்படுகிறது. அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளிக்கு முதலில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- உங்களுக்கு சிகிச்சை அளிக்கும் பரிசோதனைக் குழுவிடம் உங்களின் பெயர் மற்றும் அடையாளங்களை தெரியப்படுத்துதல் அவசியம் ஆகும்.
- உங்களைப் பற்றிய தகவல்கள் அறிதல், பரிசோதனை மற்றும் சிகிச்சை அளித்தல் போன்றவை மிகவும் நம்பகத்தன்மையுடனும் இரகசியமாகவும் பாதுகாக்கப்படுகிறது. உங்களைப் பற்றிய தகவல்கள் உங்களை பரிசோதிக்கும் மருத்துவரால் மட்டுமே அறிந்து கொள்ள முடியும்:
- உங்கள் பரிசோதனையின் முடிவுகளை நீங்கள் விரும்பும் போது அதற்கான கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

DSC கிளினிக்கில் மருத்துவம் கற்றுக் கொள்ளும் மாணவர்களும் பரிசோதனையின் போது உடன் இருப்பர். இதை நீங்கள் விரும்பாவிட்டால் உங்கள் மருத்துவரிடம் தெரிவித்துவிடவும்.


- உங்கள் நோய் பற்றி முழுமையான விளக்கம் அளித்தல். நோய்க்காக அளிக்கப்படவேண்டிய சிகிச்சை முறைகளை தெரிவித்தல். சிகிச்சை எடுத்துக்கொள்வதால் ஏற்படும் விளைவுகள், பயன்கள் மற்றும் மாற்று வழிமுறைகளை தெரிவித்தல்.
- சிகிச்சையைப் பற்றிய உங்கள் கருத்துக்கள், வாழ்த்துக்கள் மற்றும் புகார்களையும் எங்களிடம் தெரிவிக்கலாம்.

## நோயுற்றவரின் பொறுப்புகள்

DSC கிளினிக்கில் சிகிச்சை பெறும் நீங்கள் கீழ்கண்ட நடைமுறைகளை பின்பற்றி எங்களுக்கு உதவி புரிய வேண்டும்.

- உங்களின் உடல்நிலை பற்றிய முழுமையான, விளக்கமான மற்றும் துல்லியமான தகவல்களை தெரிவிக்க வேண்டும். தற்போதைய மற்றும் கடந்தகால மருத்துவ தகவல்கள், ஒவ்வாமைகள், நீங்கள் எடுத்துக்கொள்ளும் மருந்துகள், வேறு ஏதேனும் உடல்நிலை பற்றிய தகவல்கள் அனைத்தையும் தெரிவிக்க வேண்டும்.
- முன்பதிவு செய்து கொண்டு சரியான நேரத்தில் மருத்துவமனைக்கு வந்துவிடவும். முன்பதிவு பெற்ற நேரத்தில் வரமுடியாத போது முன்பே மருத்துவமனைக்கு தெரிவித்துவிடவும்.
- மருத்துவமனையின் விதிமுறைகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்:
- அனைத்து ஊழியர்கள், நோயாளிகள் மற்றும் பார்வையாளர்களும் மரியாதையுடனும் கனிவுடனும் நடத்தப்பட வேண்டும்.
- மற்றவர்களின் தனிப்பட்ட விஷயங்களில் தலையிடாதிருத்தல்.
- உங்கள் உடைமைகளை பாதுகாத்துக்கொள்ளுதல்
- மருத்துவமனையின் உடைமைகளையும் வசதிகளையும் கவனத்துடனும் பொறுப்புடனும் கையாளுதல் வேண்டும்.

## எங்கள் இடங்குறிப்பு




**DSC கிளினிக்**

31 Kelantan Lane #01-16 S(200031)

## பஸ் சேவைகள்

23, 64, 65, 66, 67, 130, 139, 147, 857

Bugis (EWL/DTL)

Rochor (DTL)

Lavender (EWL/DTL)

Farrer Parkr (DTL)

## எங்களுடண் சந்திப்பு முண்பதிவு செய்ய

சந்திப்பு முண்பதிவு மையத்தை அழைக்கவும்

6293 9648

அல்லது மின்னஞ்சல் மூலம்
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

apptdsc@nsc.com.sg

மேலும் மருத்துவகம் தகவல் கிடைக்க எங்கள் இணையதளம் WWW.DSC-CLINIC.SG அல்லது எங்கள் FACEBOOK - WWW.FACEBOOK.COM/DSCSG

PG-T-1 Printed - January 2017

# நோயுற்றவருக்கான DSC-ன் வழிகாட்டி (DSC PATIENT GUIDE)

NATIONAL SKIN CENTRE

DSC Clinic

## வரவேற்கிறோம்

அனைவரையும் எங்கள் DSC கிளினிக்கிற்கு வரவேற்கிறோம். இது நேஷனல் ஸ்கின் சென்டரின் கீழ் இயங்கும் சிறப்பு வெளிநோயாளிகள் மருத்துவமனை ஆகும். உங்களுக்கு சேவை செய்ய எங்களை அனுமதித்ததற்கு நன்றி.

உங்களுடைய வரவு மகிழ்வாகவும் திருப்தியளிக்கும் வகையிலும் இருக்க DSC கிளினிக்கில் அனைத்துவித உயர்தரமான சிகிச்சை அளிக்கப்படுகிறது.

## கிளினிக்கைப் பற்றிய தகவல்கள்

உங்களுடைய வாழ்வு வளமாக இருக்க NHG விஷன் பகிர்ந்துகொள்ளப்படுகிறது.

பால்வினை நோய்த் தொற்று (STI) பற்றி மிகத்துல்லியமாக நோயின் தன்மையை கண்டறியும் கிளினிக்காக தேசிய மற்றும் உலகளாவிய அளவில் மிகச்சிறந்து விளங்குவதே எங்கள் நோக்கமாகும். தீவிர மருத்துவ ஆய்வு, தரமான கல்வி மற்றும் சிகிச்சை பெருபவருக்கு பாதுகாப்பு போன்றவற்றை குறைந்த செலவில் தரமாகவும் நிறைவாகவும் அளிக்கிறோம்.

பால்வினை நோய்த் தொற்று பற்றி நன்கு கற்றறிந்த மிகச்சிறந்த எங்கள் நிர்வாகத்தின் பணிக்குழு உங்களுக்கு சிகிச்சையளிக்கிறது.

DSC கிளினிக்கில் இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவதால் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் போது மாணவர்களும் உடன் இருப்பர். இருப்பினும் சிகிச்சை பெறுபவரின் விருப்பத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அவர்கள் விரும்பினால் மட்டுமே மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

## DSC -ன் சேவைகள்

DSC கிளினிக் பின்வரும் சேவைகளை வழங்குகிறது:

- STI (பால்வினை நோய்) மற்றும் HIV (எச்.ஐ.வி) நோய் பாதிப்பு ஆய்வு
- பால்வழிபரவும் நோயறிதல் மற்றும் அதற்கான சிகிச்சையளித்தல்
- கர்ப்பவாய் புற்றுநோய்க்கான பாப்ஸ்மியர் சிகிச்சை
- ஹெபடிடீஸ் B மற்றும் இனஉறுப்பு மருவிற்கான தடுப்பூசி அளித்தல்
- STI (பால்வினை நோய்) மற்றும் HIV (எச்.ஐ.வி) பற்றி விழிப்புணர்வு அளித்தல்
- பெண்களுக்கான சிறப்புப் பிரிவு
- ஆண்களுக்கான சிறப்புப் பிரிவு
- பரிசோதனை மற்றும் சிகிச்சை பற்றி உங்கள் துணைக்கு எடுத்துரைக்கப்படும்
- உங்கள் தனிப்பட்ட அல்லது உங்கள் துணையுடன் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண ஆலோசனைகள் வழங்கப்படும்.
- STI (பால்வழிபரவும் நோய்) சிகிச்சைக்கான மருந்தகம் ஆணுறை வழங்குவது
- நோய்க்கான சிகிச்சையளிக்கும் வேறு இடங்களை பரிந்துரை செய்வது.
- STI / HIV க்கு அவசர உதவிக்கு தொடர்பு எண்கள் உள்ளன.

## சந்திப்பிற்கான முன்பதிவு

நீங்கள் நீண்ட நேரம் காத்திருப்பதை தவிர்க்க முன்பதிவு செய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

நீங்கள் கீழ்காணும் எந்த முறையில் வேண்டுமானாலும் முன்பதிவு, முன்பதிவில் மாற்றம் மற்றும் முன்பதிவை ரத்து செய்து கொள்ளலாம்:

- **அவசர முன்பதிவு எண்** 6293 9648
- **மின்னஞ்சலில் முன்பதிவிற்கு** apptdsc@nsc.com.sg

முன்பதிவு பெற்ற தேதியில் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு 10 - 15 நிமிடங்களுக்கு முன்பே கிளினிக்கிற்கு வந்துவிடவும். முன்பதிவு தேதியில் மாற்றம் செய்ய நினைத்தால் முன்பே எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

முன்பதிவின்றி வரும் நோயாளிகளுக்கு அதற்கென ஒதுக்கப்பட்ட எங்கள் மருத்துவ தாதியாளர் உதவி புரிவார். முன்பதிவு பெற்ற நோயாளிகளுக்கு சிகிச்சையளித்த பின்பு இவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும். இதற்கான கட்டணம் $5 செலுத்த வேண்டும். அதிகமான முன்பதிவுகள் இருந்தால் வேறு ஒரு நாளில் முன்பதிவு வழங்கப்படும்.

உங்களுக்கு வசதியான திருப்தியான சிகிச்சையளிக்க மருத்துவமனைக்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## பதிவு செய்தல்

நீங்கள் பதிவு செய்து கொள்வதற்கு எங்கள் சுகாதாரச்சேவை வழங்குநர் உங்களுக்கு உதவி புரிவார்.

1. நீங்கள் கிளினிக்கிற்கு வந்தவுடன் உங்களுக்கான வரிசை எண்ணை எடுத்துக்கொள்ள முன்பதிவு செய்யுமிடத்தை அணுகவும்.
2. உங்கள் வரிசை எண்ணை அழைக்கும் வரை காத்திருக்கவும்.
3. உங்கள் அடையாள அட்டை, CSC/SAF அட்டை, வொர்க் பெர்மிட் அட்டை, எம்ப்ளாய்மென்ட் பாஸ் மற்றும் பரிந்துரைக் கடிதத்தை காண்பிக்கவும்.
4. நீங்கள் சந்திக்க வேண்டிய மருத்துவர் / சிகிச்சையளிக்கும் அறை போன்ற தகவல்கள் உள்ள Q அட்டை உங்களுக்கு வழங்கப்படும்.

அதை ஒவ்வொரு முறையும் தவறாமல் கொண்டு வர வேண்டும். இது உங்களுடைய முன்பதிவை விரைவில் முடிக்க உதவும்.

முதல் சந்திப்பிற்குப்பின் நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும் ஒவ்வொரு முறையும் உங்களின் பெயர் மற்றும் உங்கள் அட்டையில் உள்ள HRN தெரிவிக்கவும்.

நீங்கள் DSC கிளினிக்கில் பதிவு செய்த பிறகு எங்களின் பரிசோதனைகள், நடைமுறைகள் மற்றும் சிகிச்சை முறைகளை ஏற்றுக்கொள்கிறீர்கள் ஆகும். எங்களின் சுகாதாரச்சேவைக் குழு உங்களுக்குத் தேவையான அனைத்து மருத்துவ உதவிகளையும் வழங்கும்.

## மருத்துவ கவனிப்பு

**அறிவுரை கோருதல்**

எங்கள் மருத்துவர் மற்றும் தாதியாளர் உங்களின் முழு மருத்துவ தகவல்களையும் அறிந்து கொண்டு உங்களை முழுவதும் பரிசோதனை செய்வர். உங்களின் சந்தேகங்களை மருத்துவரிடம் தெரிவித்து விளக்கம் பெறலாம்.

ஆண் நோயாளிகள் மருத்துவரை சந்திக்கும் முன்பு ஆண் தாதியாளரை சந்திப்பதன் மூலம் மருத்துவரை சந்திக்கும் போது ஏற்படும் கால தாமதத்தை தவிர்க்கலாம். ஆண் தாதியாளர் உங்களுக்கு ஏதேனும் ஆய்வக பரிசோதனை தேவைப்படுகிறதா என்பதை அறிந்து தேவைப்பட்டால் பரிசோதனைக்கு ௨ மணி நேரம் முன்பு சிறுநீர் கழிப்பதை தவிர்க்கச் சொல்வார்.

**ஆய்வுகள்**

ஆய்வக பரிசோதனைகள் கிளினிக்கிலேயே செய்யப்படுகிறது.

**நோய் கண்டறிதல்**

ஆய்வுகள் மற்றும் பரிசோதனையின் முடிவுகளை மருத்துவர் உங்களிடம் தெரிவிப்பார். மேலும் அதற்காக மேற்கொள்ளப்படும் சிகிச்சை முறைகள் பற்றியும் எடுத்துரைப்பார்.

நோயாளியின் கல்வியறிவு மற்றும் தொடர்பு கொள்ளுதல்

DSC கிளினிக்கில், செயல்படும் மருத்துக்குழு உங்களின் நோய் பற்றிய முழு விபரத்தையும் உங்களுக்கு தெரிவிப்பர். பால்வினை நோய்த் தொற்று ஏற்படாமல் இருப்பதற்கு நீங்கள் மேற்கொள்ள வேண்டிய வாழ்க்கை முறை பற்றியும் விபரமாக எடுத்துரைப்பர்.

மேலும் உங்களுடன் உடலுறவு கொள்ளும் நபரும் எங்கள் கிளினிக்கில் சிகிச்சை எடுத்துக்கொள்ள மருத்துவக்குழு ஆலோசனை வழங்குகிறது. இது நோய்த் தொற்று ஏற்படும் முன்பே அவர்களை தற்காத்துக் கொள்ள உதவுகிறது.

## கட்டணம் செலுத்துதல் மற்றும் தொடர் சிகிச்சைக்கு வருதல்:

சிகிச்சை முடிந்த பின்பு, எங்களின் உதவியாளர் உங்களுக்கான ரசீதை வழங்குவார். அதில் உங்களுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை விபரம், தொடர் சிகிச்சை தேவைப்பட்டால் அதற்கான விபரம் மற்றும் செலுத்த வேண்டிய கட்டணத் தொகை குறிப்பிடப்பட்டிருக்கும்.

கட்டணத்தை பணமாகவோ, கடன் அட்டை, பண அட்டை மூலமாகவோ அல்லது NETS மூலமாகவோ செலுத்தலாம்.

உங்கள் கட்டணத்தில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

THE DSC MANAGER
DSC CLINIC
31 KELANTAN LANE #01-16, SINGAPORE 200031

## குறுந்தகவல் வசதி

உங்களின் மருத்துவ முடிவுகள் உங்கள் விருப்பத்திற்கேற்ப குறுந்தகவல் மூலம் அனுப்பப்படுகிறது. இதைப் பற்றிய மேலும் விபரங்களுக்கு எங்கள் சுகாதாரச்சேவை வழங்குநரை அணுகவும்.

## நம்பகத்தன்மை

உங்கள் மருத்துவப் பரிசோதனையின் முடிவுகள் மிகவும் பாதுகாப்பாகவும் பிறர் அறியாதவாறும் பாதுகாக்கப்படுகிறது. உங்கள் அனுமதியின்றி பரிசோதனையின் முடிவுகளை யாரும் அறிந்துகொள்ள முடியாது.